


**04.04.2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** நாடாளுமன்ற இரு அவைகளும் மறு தேதி குறிப்பிடாமல் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

**2.** பிம்ஸ்டெக் நாடுகளின் வர்த்தக உச்சிமாநாட்டை ஆண்டுதோறும் நடத்த வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**3.** நீட் தேர்வு முறை தொடர்பாக அனைத்து சட்டமன்ற கட்சி தலைவர்களின் கலந்தாலோசனை கூட்டம் வரும் 9ஆம் தேதி நடைபெறும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

**4.** தமிழக சட்டத்துறையில் காலியாக உள்ள 166 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில சட்ட அமைச்சர் திரு.ரகுபதி தெரிவித்துள்ளார்.

**5.** பிரேசிலில் நடைபெறும் உலக குத்துசண்டை போட்டியின் 70 கிலோ எடை பிரிவின் இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் ஹித்தேஷ் முன்னேறியுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

**மக்களவை**

நாடாளுமன்ற இரு அவைகளும் மறு தேதி குறிப்பிடப்படாமல் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நிறைவுரையில் இன்று உரையாற்றிய அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா கடந்த ஜனவரி 31 ஆம் தேதி தொடங்கிய பட்ஜெட் கூட்டத்தொடரில் 118 சதவிகித செயல்பாடுகள் நடைபெற்றதாக குறிப்பிட்டார்.

16 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் எடுத்துரைத்தார்.

முன்னதாக பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு மாநிலங்களவையில் சாதனை அளவாக 17 மணி நேரமும், மக்களவையில் 14 மணி நேரமும் வக்ஃப் சட்ட திருத்த மசோதா மீது விவாதம் இடம்பெற்றதாக குறிப்பிட்டார்.

உரிய விதிகளையும் நடைமுறைகளையும் பின்பற்றியே வக்ஃப் சட்ட திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக இந்தியா மீது அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர வரி தொடர்பான பிரச்சனையில் எதிர்கட்சிகளும்,

வக்ஃப் திருத்த மசோதா தொடர்பாக மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியாகாந்தி தெரிவித்த கருத்து தொடர்பாக ஆளும் கட்சியினரும் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நண்பகல் வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

அவை நண்பகல் 12 மணிக்கு மீண்டும் கூடியபோது அவை காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா அறிவித்தார்.

மாநிலங்களவையும் மறு தேதி குறிப்பிடப்படாமல் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக மேற்கு வங்க மாநில ஆசிரியர்கள் நியமன பிரச்சனையை எழுப்பி ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பகல் 1 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது மாநிலங்களவை காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் அறிவித்தார்.

பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் அமர்வு கடந்த ஜனவரி 31ஆம் தேதிமுதல் பிப்ரவரி 13ஆம் தேதிவரையிலும்

இரண்டாம் அமர்வு கடந்த 10 ஆம் தேதி தொடங்கிய இன்று வரையிலும் நடைபெற்றது.

***********

**பிரதமர்**

பிம்ஸ்டெக் நாடுகளின் வர்த்தக உச்சிமாநாட்டை ஆண்டுதோறும் நடத்த வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பாங்காக்கில் பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர் சர்வதேச நலன்களுக்கான முக்கிய தளமாக பிம்ஸ்டெக் நாடுகள் திகழ்வதாக கூறியுள்ளார்.

இந்நாடுகளின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தி செயல்பாடுகளை ஆழப்படுத்த வேண்டும் என்றார்.

பல்வேறு துறைகளில், ஒத்துழைப்பிற்கான 21-அம்ச செயல்திட்டத்தையும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் நாணயங்களை பயன்படுத்தி வர்த்தகம் புரிவதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட வேண்டும் என்று கூறிய அவர் தகவல் தொழில்நுட்ப பிரிவின் வளமான திறன்களை நடைமுறைபடுத்தி நவீன தொழில்நுட்பங்களில் பிம்ஸ்டெக் நாடுகள் வலுப்பெற வேண்டும் என்றார்.

பேரிடர் மேலாண்மைக்கான பிம்ஸ்டெக் நாடுகளின் அறிவுசார் மையம் இந்தியாவில் அமைக்கப்படும் என்று கூறிய அவர் விண்வெளி துறையில் ஒத்துழைப்பை அதிகரித்து பாதுகாப்பு நடைமுறைகளை வலுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

திறன் கட்டமைப்பு நெறிமுறைகளில் பிரகாசமான எடுத்துக்காட்டாக திகழ்வதற்கான திறன், பிம்ஸ்டெக் நாடுகளுக்கு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போதி செயலாக்கம் திட்டத்தின் கீழ் பிம்ஸ்டெக் நாடுகளின் 300 இளையோருக்கு இந்தியாவில் ஆண்டுதோறும் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும் என்றார்.

பிம்ஸ்டெக் கலாச்சார இசை விழா இந்தாண்டு இந்தியாவில் நடத்தப்படும் என்று கூறிய அவர் கலாச்சார இணைப்புகளால் பிம்ஸ்டெக் நாடுகள் நெருங்கிவர முடியும் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் தமது தாய்லாந்து பயணத்தை முடித்துக்கொண்டு இரண்டாவது கட்டமாக இன்றுமாலை இலங்கை புறப்படுகிறார்.

இலங்கையில் தமது 3 நாள் பயணத்தின் ஒருபகுதியாக அந்நாட்டு அதிபர் **அனுரகுமார திசநாயக்கே**-வுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

***********

**செயற்கை நுண்ணறிவு**

செயற்கை நுண்ணறிவு தொடர்பான தனியார் முதலீடுகளில் கடந்த 2023ஆம் ஆண்டு இந்தியா சர்வதேச அளவில் 10 ஆவது இடத்தை வகிப்பதாக ஐ.நா.வின் வர்த்தக மேம்பாட்டு தொழில்நுட்ப படைப்பாற்றல் அறிக்கை தெரிவிக்கின்றது.

இப்பிரிவில் 67 பில்லியன் டாலர் முதலீடுகளுடன் அமெரிக்கா முதல் இடத்திலும்

7.8 பில்லியன் டாலர் முதலீடுகளுடன் சீனா 2-ஆவது இடத்திலும் உள்ளன.

170 நாடுகளை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கான தயார் நிலை பட்டியலில் 2024-ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியா 36-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக இந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

2022ஆம் ஆண்டு இந்தியா இப்பட்டியலில் 48-ஆவது இடத்தை வகித்தது குறிப்பிடத்தக்கது.

செயற்கை நுண்ணறிவு களத்தின் அறிவியல் திறனில் சீனா, ஜெர்மனி, இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் வலுவாக உள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

***********

**முதலமைச்சர் - சட்டப்பேரவை**

நீட் தேர்வு முறை தொடர்பான சட்டபூர்வ நடவடிக்கைகள் குறித்து அனைத்து சட்டமன்ற கட்சி தலைவர்களுடன் வரும் 9ஆம் தேதி கலந்தாலோசனை கூட்டம் நடைபெறும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று மானியக்கோரிக்கை விவாதத்தின்போது குறுக்கிட்டு பேசிய முதலமைச்சர் சென்னை தலைமைசெயலக வளாகத்தில் இக்கூட்டம் நடைபெறும் என்றும், சட்டமன்ற கட்சி தலைவர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் மருத்துவ கல்வி கற்பதற்கான லட்சக்கணக்கான மாணாக்கர் மற்றும் பெற்றோர்களின் கனவை நனவாக்க தமிழக அரசு சட்ட ரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று முதலமைச்சர் உறுதியளித்தார்.

***********

**ரகுபதி**

தமிழக சட்டத்துறையில் காலியாக உள்ள 166 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தின்போது பேசிய அவர் முதற்கட்டமாக 124 உதவி பேராசிரியர்கள் 8 இணை பேராசிரியர்களை நியமிப்பதற்கான அறிவிப்பு ஆணை வெளியிடப்பட்டிருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

சாதி வாரி கணக்கெடுப்பு பணியை மாநில அரசு மேற்கொண்டால் சட்டப்பூர்வமாக அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று கூறிய அவர் மக்கள் தொகை கணக்கெடுப்பு, சாதி வாரி கணக்கெடுப்பு ஆகியவற்றை மத்திய அரசு மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

***********

**சட்டப்பேரவை பொன்முடி**

வன உயிரின மோதல்களை தவிர்க்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இதுதொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதில் அளித்த அமைச்சர் தேன்கனி கோட்டை வனப்பகுதியில் மூன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரும்பு

கம்பி வடவேலி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், 7 கிலோ மீட்டர் நீளத்திற்கு தொங்கும் வகையிலான சூரிய மின்வேலி அமைக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மலையடிவார பகுதியில் 5 கோடி ரூபாய் செலவில் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு நவீன யானை புகாத பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் எடுத்துரைத்தார்.

ஓசூர் வனக்கோட்ட பகுதியில் 18 கிலோ மீட்டர் நீளத்திற்கு தொங்கும் வகையிலான சூரிய மின்வேலி 35 கிலோ மீட்டர் நீளத்திற்கு இரும்பு கம்பி வேலியும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என்றார்.

***********

**சட்டப்பேரவை கேள்வி நேரம்**

தமிழகம் முழுவதும் 640 கோடி ரூபாய் செலவில் மழை நீர் வடிகால் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையத்தில் புதிய வணிக வளாகம் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்நகராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்காக 3 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருவதாகவும், பூங்கா அமைப்பதற்கு 25 லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 4 ஆண்டுகளில் திருப்பத்தூர் நகராட்சி பகுதியின் மேம்பாட்டு பணிகளுக்கு 70 கோடியே 11 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும், அமைச்சர் கூறினார்.

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்**

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் பகுதியை டெல்டா பகுதியாக அறிவிக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சாத்தனூர் அணை பகுதியில் புதிதாக ஆய்வு மாளிகை கட்ட 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் இதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

செங்கம் தொகுதியில் உள்ள நீர்வளத்துறை அலுவலகத்திற்கு ஒருகோடியே 10 லட்ச ரூபாய் செலவில் புதிய கட்டிடம் கட்டப்படும் என்றார்.

**சென்னை மாநகராட்சி பகுதியில் முழுமையாக** புதைவட கம்பிகள் அமைக்கும் பணிகள் முடித்தபின்னர் பிற பகுதிகளுக்கு இது விரிவுபடுத்தப்படும் என்று மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

உசிலம்பட்டி விக்கிரமங்கலம் பகுதியில் 4 கோடியே 64 லட்ச ரூபாய் செலவில் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஓசூர் தொகுதியில் 2 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

**தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 22** திருக்கோவில்களுக்கு இன்று குடமுழுக்கு நடைபெற்றதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை **அமைச்சர் சேகர்பாபு** தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டில் அறநிலையத்துறை சார்பில் 6 இணை ஆணையர் அலுவலகங்கள் கட்டப்படும் என்றும் வேலூரில் 2 கோடியே 95 லட்ச ரூபாய் செலவில் இணை ஆணையர் அலுவலகம் விரைவில் திறக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**தமிழக பள்ளிகளில் இன்னும் இரண்டு** ஆண்டுகளுக்குள் 18 ஆயிரம் வகுப்பறைகளை கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.**அன்பில் மகேஷ் பொய்யாமொழி** தெரிவித்துள்ளார்.

7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

மரத்தடியில் வகுப்புகள் நடத்தப்படும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் விரைவாக வகுப்பறைகள் கட்டித்தரப்படும் என்றும், இதற்கென இந்தாண்டு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**படித்த இளைஞர்கள் புதிதாக சுய தொழில் தொடங்க** கடன் மற்றும் மானிய உதவிகளை அரசு தடையின்றி வழங்கி வருவதாக குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் **திரு. தா.மோ.அன்பரசன்** தெரிவித்தார்.

இதுவரை விண்ணப்பித்த 54 ஆயிரம் பேருக்கு ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடனும், சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மானியமும் வழங்கியிருப்பதாக தெரிவித்தார்.

L & T நிறுவனத்தின் கீழ் உள்ள சேலம் - கொச்சி நெடுஞ்சாலையை விரிவுபடுத்தி பராமரிக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் **திரு.எ.வ.வேலு** தெரிவித்துள்ளார்.

மத்திய அரசிடம் பேசி மாநில அரசு இந்த சாலை பராமரிப்புகளை மேற்கொள்ளும் என்றார்.

சேலம் நாமக்கல் பகுதியில் 84 கோடி ரூபாய் செலவில் கீழ்பாலம் அமைக்கும் பணிகளும் 16 கோடி ரூபாய் செலவில் சர்வீஸ் சாலை அமைக்கும் பணியும் நடைபெற்று வருவதாக கூறினார்.

மேலூர் பகுதியில் உள்ள கீழடிக்கு செல்லும் சாலையை விரிவுபடுத்தும் பணிகளும் அங்கு நகரும் படிகட்டுகள் அமைக்கும் பணிகளும் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

***********

**அஇஅதிமுக வெளிநடப்பு**

தமிழக சட்டப்பேரவையிலிருந்து அஇஅதிமுகவினர் இன்று வெளிநடப்பு செய்தனர்.

பேரவையில் இன்று கேள்வி நேரம் முடிந்தவுடன் எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி ஒரு பிரச்சனை குறித்து பேச முற்பட்டார்.

அப்போது குறுக்கிட்ட பேரவை தலைவர் திரு.அப்பாவு ஏற்கனவே இதுதொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் நிராகரிக்கப்பட்டதால் அதே பிரச்சனை குறித்து பேச அனுமதிக்க முடியாது என்றார்.

இதே கருத்தை அவை முன்னவர் திரு.துரை முருகனும் தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அஇஅதிமுக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து சிறிது நேரம் வெளிநடப்பு செய்தனர்.

***********

**மதுரை கோவில்**

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் முகூர்த்தகால் நடும் விழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

**குத்துசண்டை**

பிரேசிலில் நடைபெறும் உலக குத்துசண்டை போட்டியின் 70 கிலோ எடை பிரிவின் இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் ஹித்தேஷ் முன்னேறியுள்ளார்.

அரையிறுதி போட்டியில் ஹித்தேஷ் ஃபிரான்சின் **மக்கனை** 5-0 என்ற புள்ளி கணக்கில் தோற்கடித்து இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

***********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் - மும்பை இண்டியன்ஸை எதிர்கொள்கிறது.

***********

**ஹாக்கி**

15ஆவது சீனியர் ஆடவர் தேசிய ஹாக்கி சேம்பியன்சிப் போட்டிகள் உத்திரபிரதேசம் ஜான்சியில் இன்று தொடங்குகின்றன.

வரும் 15ஆம் தேதிவரை நடைபெற உள்ள இப்போட்டிகளில் தமிழகம் உட்பட 30 அணிகள் பங்கேற்கின்றன.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**